ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

07.05.2026

1. ஞான உலகம் படைக்க வேண்டி
ஞானிகள் படைகளை இணைத்து
ஞானபண்டிதனும் அற்புதம் நிகழ்த்த
ஞாலமதில் அரங்கமகான் யானும்

2. யானும் வேலவன் தனை போற்றி
உரைப்பேன் பராபவ தகர் திங்கள்
ஞானம்பட சதுர் குருவார அருளாசி
ஞானப்படைகள் அமையவே உரைப்பேன்

3. உரைக்கவே பிரணவக் குடிலில்
உயர் தொண்டர் படைகளை
குறைவின்றி அரங்கன் யானும்
குவலயம் நன்மைபெற அமைத்து

4. அமைத்து வழிநடத்தி வர
அகிலத்தினர் அணுகி வந்து
அமைத்தநல் அரங்கனென்
அங்கத்தினராகி படைகளுள்

5. படைகளுள் சேர்ந்து இனிதே
பழுதின்றி சன்மார்க்க நெறிதனை
தடைகளின்றி ஏற்று வருக
தருமவழிகளில் தொண்டு செய்து

6. செய்துமே ஞானிகள் பூசைபட
சிறப்பான அன்னதானமதில்
அய்யமின்றி பொருளுதவி செய்து
அனைவரும் தருமபலம் கூட்டிட

7. கூட்டிட குவலயம் எங்கிலும்
குறைவிலா தருமபலம் கூடி
தட்டாமல் ஞானவான்களெனும்
தனிப்பெருஞ் சக்தி உருவாகி

8. ஆகியே உலகம் பாதுகாப்புற
அமைதி வளர்ச்சி கண்டிட
மகிழவே நல்லவர்கள் ஆட்சி
மண்ணுலகம் கண்டு சிறக்கும்

9. சிறக்கவே பிரணவக் குடிலில்
செய்து வரும் பூசைகளில் இனி
மறுக்காமல் உலக சேமம் காண
மகா வேண்டல் வைத்து பூசை

10. பூசை தொடர்ந்திட வேணும்
புண்ணிய பலம் கொண்டவர்கள்
பூசை வைத்து எத்தணம் செய்ய
பூவுலகம் நல்லாட்சி ஞானஆட்சி என கண்டு

11. கண்டுமே மக்களிடை தெளிவும்
கலியுகம் ஞானயுகம் ஆகும்
உண்டாகும் வேலவன் ஆட்சி காலம்
உரைத்திட்ட அரங்கனென் குருவார ஆசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி